# பயிர்ச்செய்கை நடவடிக்கைகளை வெற்றிகரமாக நடத்துவதற்காகச் சரியான பீடைமுகாமை உத்திகளைத் திட்டமிடுவார்




Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## தேர்ச்சி 1.0

பயிர்ச்செய்கை நடவடிக்கைகளை வெற்றிகரமாக நடத்துவதற்காகச் சரியான பீடைமுகாமை உத்திகளைத் திட்டமிடுவார்

## தேர்ச்சி மட்டம் 1.4

பயிர்செய் நிலத்தில் காணப்படும் பல்வேறு களை வகைகளை விசாரணை செய்வார்.

## களைகளை வெவ்வேறு நியமங்களின் கீழ் வகைப்படுத்தல்

### வாழ்க்கைக் காலத்துக்கு அமைவாக

**ஓராண்டுக் களைகள்:**

ஓர் ஆண்டு காலத்தில் அல்லது அதிலும் குறைவான காலத்தில் வளர்ச்சியைப் பூர்த்திசெய்து, பூத்துக் காய்த்து வித்துக்களை உற்பத்தி செய்த பின்னர் இறக்கும் களைகள்.

சீதேவியார் செங்கழுநீர் (Vernonia cinerea) , குப்பைமேனி(Acalipha indica) , கடுபகரை (Emilia sonchifolia) ,கிராப்பளா / அமலை (Commelina benghalensis)

**பல்லாண்டுக் களைகள்:**

ஓர் ஆண்டுக்கு மேற்பட்ட வாழ்க்கை வட்டத்தைக் கொண்ட களைகள் இவ்வகையில் அடங்கும்.

பீனாறி (Lantana camara), சிறுகோரை (Cyperus rotundus)

தொகுப்பு : Y. தர்மிளி, S. மானிதி, J. நிகேதினி, (ஆசிரியர்கள், வடக்கு மாகாணம்)

கணினி வடிவமைப்பு : திரு ப. இளங்கீரன் ஆசிரியர் - த.தொ.தொ (வ/புளியங்குளம் இ.க)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## வளரும் இடத்துக்கு அமைவாக

- மேட்டுநிலக் களைகள் - குப்பைமேனி, சீதேவியார் செங்கழுநீர்
- சேற்றுநிலக் களைகள் - வள்கராபு, பஜிரி, துனஸ்ஸ, தியசியம்பளா, மாறுக், கொக்மொட்டை
- நீரில் வளரும் களைகள் - சல்வீனியா, ஐதரில்லா, நீர்வாழை (ஐக்கோனியா), ஆகாயத் தாமரை (Pistia)

## உருவவியல் இயல்புகளுக்கு அமைவாக

- அகன்ற இலைக் களைகள் - இலைகள் அகலமானவை,வலவயுரு நரம்பமைப்பு-கீழ்க்காய் நெல்லி, தியசியம்பள
- புல் வகைகள் -இலைகள் ஒடுங்கியவை, சமாந்தர நரம்பமைப்பு,தண்டு உருளை வடிவமானவை, இலைமடல் காணப்படாது – Poacea குடும்பத் தாவரங்கள்
- கோரை வகைகள் -தண்டு முக்கோண வடிவானது, இலை மடல் காணப்படாது - Cyberacea குடும்பத் தாவரங்கள்

## அந்நிய ஆக்கிரமிப்புக் களைகள்

யாதேனும் நாட்டிலுள்ள சூழற் தொகுதியொன்றினைப் பிறப்பிடமாகக் கொண்ட வேறோர் நாட்டில் அதற்கொப்பான ஒரு சூழல் தொகுதியை வந்தடைந்து அங்கு வளர்ச்சியடைந்து, அச்சூழல் தொகுதிக்கோ, உயிர்ப் பல்வகைமைக்கோ பாதிப்புக்களை ஏற்படுத்தும் தாவரம், அந்நிய ஆக்கிரமிப்புக் களைகள் எனப்படும்.

தொகுப்பு : Y. தர்மிளி, S. மானிதி, J. நிகேதினி, (ஆசிரியர்கள், வடக்கு மாகாணம்)

கணிணி வடிவமைப்பு : திரு ப. இளங்கீரன் ஆசிரியர் - த.தொ.தொ (வ/புளியங்குளம் இ.க)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## அந்நிய ஆக்கிரமிப்புக் (Invasive)களைகள் இந்நாட்டில் பரம்பியமைக்கான காரணங்கள்.

- அலங்காரத் தாவரங்களாக வளர்த்தல்.
- விவசாயம் மற்றும் வனச் செய்கைக்காகப் பயன்படுத்தல்.
- கடல்கடந்து வரும் பயணிகள் மூலம் பரம்புதல்.
- ஒட்டிய நிலையில் பரம்புதல்.

வினா : **இலங்கையில் விவசாய உற்பத்தியில் அந்நிய மற்றும் ஆக்கிரமிப்புக் களைகளின் தாக்கத்தை விவரிக்குக.**

தொகுப்பு : Y. தர்மிளி, S. மானிதி, J. நிகேதினி, (ஆசிரியர்கள், வடக்கு மாகாணம்)

கணிணி வடிவமைப்பு : திரு ப. இளங்கீரன் ஆசிரியர் - த.தொ.தொ (வ/புளியங்குளம் இ.க)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk